# April 30, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, காவிரியில் இருந்து தமிழகத்துக்கு கர்நாடகம் மே மாதம் 2.5 டிஎம்சி தண்ணீர் திறந்து விட காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டது.

(i) தமிழகத்துக்கு தண்ணீர் திறப்பது தொடர்பாக ஆலோசிக்க காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 50-ஆவது கூட்டம் தில்லியில் உள்ள அதன் அலுவலகத்தில் ஹைபிரிட் (ஆன்லைன் மற்றும் நேரடி பங்கேற்பு) முறையில் நடைபெற்றது.

(ii) இக்கூட்டத்தில் பங்கேற்குமாறு தமிழகம், கர்நாடகம், கேரளம், புதுச்சேரி மாநிலங்களின் நீர்வளத் துறை அதிகாரிகளுக்கு ஆணையம் அழைப்பு விடுத்திருந்த நிலையில், இம்மாநிலங்களின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர்.

(iii) காவிரி வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி கர்நாடகம் தமிழகத்துக்கு திறந்து விட வேண்டிய தண்ணீரை உறுதி செய்வதற்காக இக்கூட்டம் நடைபெற்றது.

(iv) ஆணையத்தின் தலைவர் எஸ். கே.ஹல்தார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தமிழகத்தின் சார்பில் தமிழ்நாடு உறுப்பினரும் நீர்வளத் துறையின் செயலருமான ஜெயகாந்தன், காவிரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன்மாநில நதிநீர்ப் பிரிவு தலைவர் இரா. சுப்ரமணியன் ஆகியோர் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் தமிழகம் தரப்பில் வலியுறுத்தப்பட்டதாவது:

- தற்போது (28.04.2026) மேட்டூர் அணையின் நீர் இருப்பு 42.397 டி.எம்.சி ஆக உள்ளது. அணையிலிருந்து வினாடிக்கு 1503 கன அடி நீர் குடிநீர், தொழிற் சாலை பயன்பாட்டிற்கும் மற்றும் சுற்றுச்சூழல் நீர் ஓட்டத்துக்காகவும் திறந்துவிடப்படுகிறது.
- நடப்பு நீர்ப்பாசன ஆண்டில் (2025-2026) 2025, ஜூன் 1 முதல், ஏப்ரல் 27-ஆம் தேதி வரை பில்லிகுண்டுலுவில் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீரின் அளவான 174.500 டி.எம்.சி.-க்கு பதிலாக மிகை நீர் உள்பட கிடைக்கப்பெற்ற நீரின் அளவு 326.945 டி.எம்.சி. ஆகும்.
- இதை சுட்டிக்காட்டி, கர்நாடக உறுப்பினர், கர்நாடகம் அளித்துள்ள மிகை நீரையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்று தெரிவித்ததை ஏற்றுக்கொள்ள இயலாது. கர்நாடகம் அதன் நீர்த்தேக்கத்தில் தேக்க முடியாமல் வெளியேற்றிய நீரினை அது சொந்தம் கொண்டாட முடியாது.
- கர்நாடக அணைகளின் நீர் இருப்பைக் கருத்தில்கொண்டு உச்சநீதிமன்ற ஆணையின்படி, தமிழகத்திற்கு மே மாதம் வழங்கப்பட வேண்டிய சுற்றுச்சூழல் நீர் அளவான 2.5 டி.எம்.சி நீரை பில்லிகுண்டுலுவில் கர்நாடகம் உறுதி செய்ய ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூட்டத்தில் தமிழகம் வலியுறுத்தியது.
- இதையடுத்து காவிரியில் இருந்து கர்நாடகம் தமிழகத்துக்கு மே மாதம் 2.5 டி.எம்.சி. (ஆயிரம் மில்லியன் கன அடி) தண்ணீர் திறந்துவிட காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டது.
- ஒரு டிஎம்சி என்பது வினாடிக்கு 11,574 கன அடி வீதம் 24 மணி நேரம் தொடர்ந்து நீரை வெளியேற்றும்போது கிடைக்கும் அளவாகும்.

(v) பின்னணி:

- தமிழகம், கர்நாடகம் இடையேயான காவிரி நதி நீர்ப் பங்கீட்டு பிரச்னை

தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் 2018 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கியது. கர்நாடகம் எந்தெந்த மாதங்களில் எவ்வளவு நீர் தமிழகத்துக்கு வழங்க வேண்டும் என்பதை அத்தீர்ப்பின் மூலம் உச்சநீதிமன்றம் நிர்ணயம் செய்திருந்தது.

- அந்த தீர்ப்பை அமல்படுத்தவும், காவிரி நீர்ப் பங்கீட்டை கண்காணிக்கவும் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய இரு அமைப்புகளையும் உச்சநீதிமன்றம் அப்போது அமைத்தது.
- அதன்படி, இந்த இரு அமைப்புகளும் அவ்வப்போது கூடி காவிரி நதி நீர் பங்கீடு தொடர்பாக உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் உத்தரவுகளை பிறப்பித்து வருகின்றன.

2. அமெரிக்க சுதந்திரத்தின் 250-ஆவது ஆண்டையொட்டி, அந்நாட்டு நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய பிரிட்டன் அரசர் மூன்றாம் சார்லஸ். 'அமெரிக்கா-பிரிட்டன் உறவு மனித வரலாற்றிலேயே மிகவும் முக்கியமானது' என்று புகழாரம் சூட்டிய அவர், உலக விவகாரங்களில் அமெரிக்கா தனிமைப்பட்டு ஒதுங்குவதைத் தவிர்த்து, ஈடுபாட்டுடன் இருக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

3. சீனாவுடன் சுமூகமான ராஜீய உறவுகளைக் கொண்டுள்ள மேலும் 20 ஆப்பிரிக்க நாடுகளுக்கு, ஒரு குறிப்பிட்ட வரம்பு வரையிலான இறக்குமதிப் பொருள்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்படுவதாக சீனா அறிவித்துள்ளது.

(i) இந்த வரிச் சலுகை வரும் வெள்ளிக்கிழமை (மே 1) முதல் 2028- ஆம் ஆண்டு, ஏப். 30 வரையில் 2 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) முன்னதாக கடந்த 2024-ஆம் ஆண்டு, டிசம்பரில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய 33 ஆப்பிரிக்க நாடுகளுக்கு மட்டும் சீனா இந்தச் சலுகையை வழங்கியிருந்தது. தற்போது, அந்தப் பட்டியலில் இல்லாத மேலும் 20 ஆப்பிரிக்க நாடுகளையும் இதில் இணைத்து, இந்தச் சலுகையை சீனா விரிவுபடுத்தியுள்ளது.

(iii) அதேநேரம், ஆப்பிரிக்காவில் இருந்து சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு ஒரு குறிப்பிட்ட வரம்பு (வரி ஒதுக்கீடு) நிர்ணயிக்கப்படும். அந்த வரம்புக்குள் இருக்கும் பொருள்களுக்கு மட்டுமே பூஜ்ஜிய வரி பொருந்தும்.

(iv) நிர்ணயிக்கப்பட்ட வரம்பைத் தாண்டி அதிகமான பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டால், அந்த கூடுதல் பொருள்களுக்கு வழக்கம் போல வரி வசூலிக்கப்படும் என்று சீனாவின் சுங்க வரி ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

(v) 'வளர்ச்சிக்கான தங்கச்சாவி'...:

- இது தொடர்பாக சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர்லின் ஜியான் கூறுகையில், 'மொத்தம் 53 ஆப்பிரிக்க நாடுகள் இந்த வரி விலக்கு திட்டத்தால் பயன்பெறும். இதன் மூலம், ஆப்பிரிக்காவின் தரமான பொருள்கள் சீன மக்களின் வீடுகளுக்கு நேரடியாக வந்தடையும். அதேபோல், ஆப்பிரிக்காவில் சீன நிறுவனங்களின் முதலீடுகளும், தொழில் வளர்ச்சியும் அதிகரிக்கும்.
- ஒட்டுமொத்தமாக இந்த நடவடிக்கை, ஆப்பிரிக்க வர்த்தக செழிப்பு மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கான 'தங்கச் சாவி'.

(vi) கடந்த 2025-ஆம் ஆண்டு புள்ளி விவரங்களின்படி, சீனா-ஆப்பிரிக்கா இடையிலான மொத்த வர்த்தகம் 34,800 கோடி டாலரை எட்டியுள்ளது. இதில் சீனாவின் ஏற்றுமதி 22,500 கோடி டாலராகவும், ஆப்பிரிக்காவின் ஏற்றுமதி 12,300 கோடி டாலராகவும் இருந்தது. இப்புதிய வரி விலக்கு மூலம் இந்த வர்த்தக இடைவெளி குறையும் என

எதிர்பார்க்கப்படுகிறது.

4. இலங்கையின் யாழ்ப்பாணம், செம்மணி பகுதியில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழி அகழாய்வுப் பணிகள், நீதிமன்ற உத்தரவு காரணமாக மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன.

(i) விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையே போர் உச்சக்கட்டத்திலிருந்த 1990-களிலேயே செம்மணி விவகாரம் முதன் முதலில் கவனத்தைப் பெற்றது. 1998-இல் இப்பகுதியில் 15 எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டது.

(ii) கடந்த ஆண்டு பிப்ரவரியில் இப்பகுதியில் நடைபெற்ற வழக்கமான மராமத்துப் பணிகளின்போது எலும்புக்கூடுகள் மீண்டும் வெளிப்பட்டன. இவை போர்க் காலகட்டத்தில் சட்டவிரோதமான முறையில் கொல்லப்பட்டவர்களுடையதாக இருக்க அதிக வாய்ப்புள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

(iii) தொடர்ந்து, மே மாதம் முதல் நீதித்துறை கண்காணிப்பில் அகழாய்வுப் பணி தொடங்கி நடைபெற்றது. மொத்தம் 240 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டு, மீட்கப்பட்ட நிலையில், நிதி பற்றாக்குறை காரணமாக கடந்த செப்டம்பரில் பணிகள் நிறுத்தப்பட்டன.

(iv) இந்நிலையில், தற்போது 21 லட்சம் (இலங்கை ரூபாய் மதிப்பில்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, சுமார் 7 மாதங்களுக்குப் பிறகு பணிகளை மீண்டும் தொடங்க நீதிமன்றம் உத்தரவிட்டது. ஐரோப்பிய யூனியன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ருமேனியா ஆகிய சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் இப்பணிகளை நேரில் பார்வையிடவும் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

(v) 30 ஆண்டுகால உள்நாட்டுப் போர் 2009-இல் முடிவுக்கு வந்த நிலையில், தற்போது வெளிவரும் இச்சான்றுகள் சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்துள்ளன.

5. கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும். சிட்டி யூனியன் வங்கியின் புதிய நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக விஜய் ஆனந்த் வரும் மே 1-ஆம் தேதி முதல் பொறுப்பேற்கவுள்ளார்.

(i) கடந்த 15 ஆண்டுகளாக வங்கியின் வளர்ச்சிக்கு வித்திட்ட தற்போதைய நிர்வாக இயக்குநர் என்.காமகோடியின் பதவிக்காலம் முடிவடைவதால், இந்தத் தலைமை மாற்றம் நடைபெறுகிறது. வங்கியில் 2023-இல் செயல் தலைவராக இணைந்த விஜய் ஆனந்த், கடந்த ஆண்டு செயல் இயக்குநராகப் பதவி உயர்வு பெற்றார்.

6. டிவிட்டர் (தற்போது எக்ஸ்) சமூக ஊடக நிறுவனத்தின் முன்னாள் சிஇஓ பராக் அகர்வால் தொடங்கிய பேரலல் வெப் சிஸ்டம்ஸ்' ஏ.ஐ. நிறுவனம், தற்போது 200 கோடி டாலர் சந்தை மதிப்பை எட்டியுள்ளது.

(i) அண்மையில் நடைபெற்ற நிதி திரட்டலில், உலகின் முன்னணி முதலீட்டு நிறுவனங்களிடமிருந்து 10 கோடி டாலர் நிதியைப் பெற்றதன் மூலம் இந்த மைல்கல்லை நிறுவனம் கண்டுள்ளது.

(ii) கடந்த ஆண்டு ஆகஸ்டில் தொடங்கப்பட்ட இந்நிறுவனம், தன்னாட்சி ஏ.ஐ. ஏஜென்ட்டுகளை மேம்படுத்துவதற்கான அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்குவதில் கவனம் செலுத்தி வருகிறது. மனிதர்களைக் காட்டிலும் மிக வேகமாகவும், துல்லியமாகவும் இணையதளங்களை ஆராய்ந்து தகவல்களைத் திரட்டுவதே இதன் முக்கிய இலக்காகும். குறிப்பாக, இந்நிறுவனத்தின் 'லாங் ஹாரிசன்' ஏ.ஐ. தொழில்நுட்பம், அதிக நேரம்

எடுக்கக்கூடிய சிக்கலான வேலைகளைப் பின்னணியில் தடையின்றி செய்யும் திறன் கொண்டது.

7. அயர்லாந்தில் நடைபெற்ற ஐபிஎஸ்எஃப் உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப்பில், இந்தியாவின் கோத்தாரி 1,133-477 என்ற புள்ளிகள் கணக்கில், சக இந்தியரும் 19 முறை சாம்பியனுமான பங்கஜ் அத்வானியை வீழ்த்தி, சாம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்டார்.

8. எத்தனால் கலப்பு மற்றும் மாற்று எரிபொருள் பயன்பாட்டுக்கான வாய்ப்பை விரிவுபடுத்தும் வகையில், வாகன புகை உமிழ்வு விதிமுறைகளில் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் திருத்தங்களைப் பரிந்துரைத்துள்ளது.

(i) இது அனைத்து வகையான வாகனங்களில் கலப்பு எரிபொருள், தூய்மையான உயிரிபொருளைப் பயன்படுத்தும் வாகனங்களின் பயன்பாட்டுக்கு வழிவகுக்கும்.

(ii) இது தொடர்பாக மத்திய மோட்டார் வாகன விதிமுறைகள் 1989-இல் செய்யப்பட்டுள்ள வரைவு திருத்தங்கள், பெட்ரோலுடன் 85 சதவீதம் எத்தனால் கலந்த இ85 எரிபொருள், வாகனங்களை ஏறக்குறைய முழுமையாக எத்தனால் மட்டுமே கொண்டு இயக்கும் இ100 எரிபொருள், 100 சதவீதம் புதுப்பிக்கத்தக்க எரிபொருளான பி100 உயிரி டீசல், ஹைட்ரஜன்-சிஎன்ஜி இயற்கை வாயு கலவைகள் ஆகியவற்றின் பயன்பாட்டை பரவலாக்க வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டுள்ளன.

(iii) இந்தத் திருத்தங்கள் குறித்து தனிநபர்கள், அமைப்பினர் உள்பட சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் கருத்துத் தெரிவிக்க 30 நாள்கள் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

(iv) தூய்மையாக எரியும் எரிபொருளை உருவாக்க வேண்டும், கச்சா எண்ணெய் இறக்குமதியை சார்ந்திருப்பதை குறைக்க வேண்டும், கார்பன் உமிழ்வை குறைக்க வேண்டும் என்ற நோக்கில், ஏற்கெனவே பெட்ரோலுடன் 20 சதவீதம் எத்தனால் கலந்த எரிபொருள் பயன்பாடு இந்தியாவில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

9. இந்தியா மற்றும் நியூசிலாந்து இடையே சமீபத்தில் கையெழுத்திடப்பட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் (FTA) பகுப்பாய்வு

(i) பின்னணியும் உத்திசார் அவசியமும்

- அமெரிக்க நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து, உலக வர்த்தக அமைப்பின் (WTO) கட்டமைப்பு வலுவிழந்துள்ள நிலையில், இந்தியாவின் பொருளாதார நலன்களைப் பாதுகாக்க இருதரப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்வது இந்தியாவுக்கு இன்றியமையாததாக மாறியுள்ளது.
- மொரிஷியஸ், ஐக்கிய அரபு அமீரகம் (UAE), ஓமன், பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் (EU) மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் மற்றும் பிராந்தியங்களுடன் இந்தியா ஏற்கனவே 20-க்கும் மேற்பட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.
- 2024–25 நிதியாண்டில் இந்தியா மற்றும் நியூசிலாந்து இடையிலான வர்த்தகம் 49% அதிகரித்து, 1.3 பில்லியன் டாலர் அளவை எட்டியுள்ளது; இருப்பினும், நியூசிலாந்தின் மொத்த இறக்குமதியில் இந்தியாவின் பங்கு 1.84% என்ற அளவிலேயே குறைவாக உள்ளது. அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் இந்த வர்த்தக அளவை இரட்டிப்பாக்குவதே இந்த புதிய ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.

(ii) இந்தியாவுக்கான குறிப்பிட்ட நன்மைகள்

இந்த ஒப்பந்தம் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கும் திறமையான தொழில் வல்லுநர்களுக்கும் குறிப்பிடத்தக்க வாய்ப்புகளின் கதவுகளைத் திறக்கிறது:

- வரி-இல்லா அணுகல்: இந்தியாவின் அனைத்து ஏற்றுமதிப் பொருட்களுக்கும் 100% இறக்குமதி வரி விலக்கு அளிக்க நியூசிலாந்து ஒப்புக்கொண்டுள்ளது.
- வரிகள் நீக்கம்:
- இந்தியாவின் ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள், காலணிகள் மற்றும் பொறியியல் உதிரிபாகங்கள் மீதான 10% வரி நீக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் மருந்துப் பொருட்கள், மின்னணு சாதனங்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட வேளாண் விளைபொருட்கள் மீதான 5% வரி நீக்கப்பட்டுள்ளது.
- பீங்கான் பொருட்கள் மற்றும் மோட்டார் வாகன உதிரிபாகங்கள் மீதான வரிகளும் நீக்கப்பட்டுள்ளன.
- தொழில் வல்லுநர்கள் மற்றும் மாணவர்களின் குடியேற்றம்:
- தற்காலிக நுழைவு விசா திட்டத்தின் கீழ், தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளைச் சேர்ந்த 5,000 இந்தியத் தொழில் வல்லுநர்கள், நியூசிலாந்தில் மூன்று ஆண்டுகள் தங்கியிருந்து பணியாற்ற அனுமதிக்கப்படுகிறார்கள்.
- ஆயுஷ் (AYUSH) மருத்துவர்கள், இந்திய சமையல் கலை நிபுணர்கள் மற்றும் இசை ஆசிரியர்கள் ஆகியோர் நியூசிலாந்தில் பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ளன.
- நியூசிலாந்தில் பயிலும் இந்திய மாணவர்கள், வாரத்திற்கு 20 மணி நேரம் பகுதிநேரப் பணிபுரிய தற்போது அனுமதிக்கப்படுகிறார்கள்.

(iii) நியூசிலாந்துக்கான குறிப்பிட்ட நன்மைகள்

உலகின் மிகப்பெரிய நுகர்வோர் தளங்களில் ஒன்றிற்கான அணுகலை நியூசிலாந்து பெறுகிறது; அத்துடன் தனது பொருளாதாரக் கூட்டாண்மைகளையும் பன்முகப்படுத்துகிறது:

- சந்தை அணுகல்: நியூசிலாந்து தற்போது இந்தியாவின் 140 கோடி மக்கள் தொகையைக் கொண்ட சந்தையை நேரடியாக அணுகும் வாய்ப்பைப் பெற்றுள்ளது; குறிப்பாக, இந்தியாவின் பிரம்மாண்டமான நடுத்தர வர்க்க நுகர்வோர் பிரிவை இது இலக்காகக் கொண்டுள்ளது.
- வரிச் சலுகைகள்: நியூசிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் கம்பளி, நிலக்கரி, மதுபானங்கள், அவகேடோ மற்றும் பெர்ரி வகைகளின் மீது முன்பு விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி வரிகளில் 95 சதவீதத்தை இந்தியா தற்போது நீக்கியுள்ளது.
- சேவைத் துறை விரிவாக்கம்: சுற்றுலா, கல்வி மற்றும் கணினித் தொழில்நுட்பம் உள்ளிட்ட 118 பல்வேறு சேவைத் துறைகளில் இந்தியாவில் ஈடுபட நியூசிலாந்துக்கு இப்போது வாய்ப்பு கிடைத்துள்ளது.
- தொழில்நுட்பப் பரிமாற்றம்: விவசாயம் மற்றும் உற்பத்தித் துறைகளில் நியூசிலாந்து கொண்டுள்ள மேம்பட்ட தொழில்நுட்பங்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்ய இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது.
- சீனாவைச் சார்ந்திருத்தலைக் குறைத்தல்: இந்தியாவின் அதிவேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரத்துடன் உறவுகளை வலுப்படுத்துவதன் மூலம், சீனா மீது தான் கொண்டுள்ள அதீத பொருளாதாரச் சார்ந்திருத்தலைக் குறைப்பதற்கான ஒரு உத்திசார் நடவடிக்கையாக இந்த ஒப்பந்தம் நியூசிலாந்துக்கு அமைகிறது.

(iv) பாதுகாப்பு ஏற்பாடுகளும் பொருளாதாரப் பாதுகாப்பும்

- இந்திய விவசாயிகளின் பாதுகாப்பு: உள்ளூர் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு, பால் பொருட்கள், வெங்காயம், சர்க்கரை, நறுமணப் பொருட்கள், சமையல் எண்ணெய் மற்றும் ரப்பர் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த விவசாயப் பொருட்களின் மீது நியூசிலாந்துக்கு எவ்வித வரிச் சலுகைகளையும் இந்தியா வழங்கவில்லை.
- முதலீட்டுக்கான வாய்ப்புகள்: நியூசிலாந்து 422 பில்லியன் டாலர் அளவிலான சர்வதேச முதலீட்டுத் திறனைக் கொண்டுள்ள நிலையில், அதில் 10 சதவீதத்தை மட்டும் இந்தியாவில் முதலீடு செய்தாலும்கூட, இந்த ஒப்பந்தம் ஒரு மிகப்பெரிய வெற்றியாகக் கருதப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் கிடைத்த ஒரு வெற்றியாகும்; இது நியூசிலாந்துக்குச் சீனாவுக்கு மாற்றாக ஒரு முக்கிய சந்தையை வழங்குகிறது என்பதோடு, இந்தியா சேவை மற்றும் உற்பத்தித் துறைகளுக்கான உலகளாவிய மையமாக உருவெடுப்பதற்கான ஒரு பாதையையும் அமைத்துத் தருகிறது.